**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,</u>
<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.</u>
<u>2022 ம் வருடம் ஜீன் திங்கள் 30 ம் நாள் வியாழக்கிழமை</u>

**<u>O.S.244/2011 இல் E.P.11/2017 இல் E.A.38/2018</u>**

பாப்பு (எ) ராமராஜ் ... மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதி

/ எதிர் /

சுப்புலட்சுமி ... எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதி

இம்மனுவானது கடந்த 14.06.2022 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.G.A.அதிபதி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பாலசுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதி மற்றும் எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதி தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும். இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**<u>ஆணையுரை</u>**

இம்மனுவானது E.P.R.No.11/2017 மனுவில் மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள உரிமை விளம்புகை கோரும் மனுவான E.A.39/2018 மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்படும்வரை நிறைவேற்று மனுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்து உத்தரவு பிறப்பிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 21 விதி 26(1)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:</u>**

மனுதாரர் E.P.R.11/2017 மனுவின் எதிர்மனுதாரர். அ.வ.எண்.244/2011 வழக்கின் பிரதிவாதி. அசல் வழக்கானது எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதி, மனுதாரர் தீர்ப்புகடனாளி / பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதி வழக்கில் தாவா ஏ மற்றும் பி செட்யூல் சொத்துக்களை குறிப்பிட்டிருந்த நிலையில் தாவா பி செட்யூல் சொத்தினைப் பொறுத்து மட்டும் பரிகாரம் கோரியுள்ளார். எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதி வழக்குரையில் இரண்டு அயிட்ட சொத்துக்கள் தனக்கு பாத்தியப்பட்டிருந்ததாகவும், 2006 ம் வருடம் ஜீன் மாதத்திலிருந்து எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் மனுதாரர் / தீர்ப்புகடனாளி / பிரதிவாதியை தனது உறவுக்காரர் என்ற முறையில் வாடகை தொகை எதுவும் செலுத்தாமல் குடியிருக்க அனுமதித்துள்ளதாக கூறியுள்ளார். மனுதாரர் / தீர்ப்புகடனாளி / பிரதிவாதி 31.03.2011 ம் தேதியில் சட்டவிரோதமாக தாவா ஏ செட்யூல் சொத்திலிருந்த மரங்களை வெட்டிவிட்டதாகவும், தாவா பி செட்யூல் சொத்தின் சுவாதீனத்தை எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதியின் வசம் ஒப்படைப்பதற்காக வழக்கினை தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளார். 27.05.2011 ம் தேதியில் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பெற்றுக்கொண்டு ஆறு வருடங்களாக அமைதியாக இருந்து விட்டு E.P.R.11/2017 என்ற எண்ணில் சொத்தின் சுவாதீனம் கோரி நிறைவேற்று மனுவினை தாக்கல் செய்துள்ளார். நிறைவேற்று மனுவில் அறிவிப்பு சார்பு செய்யப்பட்ட போது தான் மோசடியாக பெற்ற ஒருதலைபட்ச தீர்ப்பாணை பற்றிய விபரம் மனுதாரர் / தீர்ப்புகடனாளி / பிரதிவாதிக்கு தெரிய வந்தது. அது பற்றி விசாரணை மேற்கொள்ளப்பட்ட போது அழைப்பாணை சார்பு செய்யப்பட்டதாக பொய்யாக கூறி ஒருதலைபட்ச தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளது. தற்போது மனுதாரர் / தீர்ப்புகடனாளி / பிரதிவாதிக்கு அ.வ.எண்.244/2011

வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பாணை பற்றிய விபரம் தெரிய வந்ததின் காரணமாக மேற்படி தீர்ப்பாணை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், நிறைவேற்றத்தக்கதல்ல என்றும் நடவடிக்கை எடுத்துள்ளார். மனுதாரர் / தீர்ப்புகடனாளி / பிரதிவாதி இம்மனுவுடன் இணைத்து தாவா சொத்தில் தனக்கு உள்ள உரிமையைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரி மனுவினை தாக்கல் செய்துள்ள நிலையில் மேற்படி மனுவானது முடிக்கப்படும் வரையில் அசல் நிறைவேற்று மனுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

3) **எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்** :

மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதியின் மனு பொய்யும், மோசடியானது என்பதால் சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதி வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளைத் தவிர மனுவில் கண்டுள்ள மற்ற சங்கதிகளை மனுதாரர் / தீர்ப்புகடனாளி / பிரதிவாதியே நிரூபிக்க வேண்டும். நிறைவேற்று மனுவினை இழுத்தடிக்கவும், எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தினை அபகரிக்கும் நோக்கத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதி தாவா சொத்தின் சுவாதீனம் கோரி நிறைவேற்று மனுவினை தாக்கல் செய்திருந்த நிலையில் மேற்படி மனுவில் அழைப்பாணை சார்பு செய்யப்பட்டுள்ள போதிலும் மனுதாரர் / தீர்ப்புகடனாளி / பிரதிவாதி ஆஜராகாத காரணத்தால் 27.06.2011ம் தேதியில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதுபோல் நிறைவேற்று மனுவிலும் மனுதாரர் / தீர்ப்புகடனாளி / பிரதிவாதிக்கு அறிவிப்பு சார்பு செய்யப்பட்டுள்ள போதிலும் அதிலும் ஆஜராகாத காரணத்தால் தோன்றாதரப்பினராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதிக்கு உடல்நலம் பாதிக்கப்பட்ட காரணத்தால் நி.ம.எண்.6/2012 மனுவானது

22.02.2013ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதி உடல்நலம் தேறிய பின்னர் மீண்டும் சொத்தின் சுவாதீனம் கோரி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். அதிலும் அறிவிப்பு அனுப்பப்பட்ட பின்னரும் மனுதாரர் / தீர்ப்புகடனாளி / பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தால் 21.08.2017ம் தேதியில் சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் நீதிமன்ற அமீனா சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைப்பதற்காக சென்ற போது சொத்தின் விபரம் தவறாக இருந்த காரணத்தால் மீண்டும் சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்கக்கோரி மனு தாக்கல் செய்த போது தான் மேற்படி விபரம் தெரிய வந்ததாக கூறி மனுதாரர் / தீர்ப்புகடனாளி / பிரதிவாதி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார். வழக்கு தாக்கல் செய்ததிலிருந்து வழக்கின் நடவடிக்கைகளைப் பற்றி தெரிந்து கொண்டே மனுவின் இறுதிகட்ட நிலையில் கெட்ட எண்ணத்துடன் மனுக்களை தாக்கல் செய்வதையே மனுதாரர் / தீர்ப்புகடனாளி / பிரதிவாதி வழக்கமாக கொண்டிருந்தார். எனவே அதன் காரணமாக எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதி பெற்றுள்ள தீர்ப்பாணை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று பரிகாரம் கோர இயலாது. எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதி அ.வ.எண்.331/1984 என்ற எண்ணில் மனுதாரர் / தீர்ப்புகடனாளி / பிரதிவாதியையும் சேர்த்து பத்து நபர்களுக்கு எதிராக ஒரு வழக்கினை தாக்கல் செய்திருந்த நிலையில் மேற்படி வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதனை எதிர்த்து உடுமலைபேட்டை சார்பு நீதிமன்றத்தில் A.S.NO.37/1988 என்ற எண்ணில் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்திருந்த நிலையில் மேற்படி மேல்முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதை சாதகமாக எடுத்துக் கொண்டு மனுதாரர் / தீர்ப்புகடனாளி / பிரதிவாதி மேற்படி வழக்கில் அவர் தரப்பினர் என்பதால் தீர்ப்பாணை சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்று பரிகாரம் கோரி வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளதின் காரணமாக இந்த தீர்ப்பாணை சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்று கூற இயலாது. மனுதாரர் / தீர்ப்புகடனாளி / பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில் தாவா சொத்தில் தனக்கு உரிமையுள்ளது என்று எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. மேலும் தாவா சொத்தினைப் பொறுத்த உரிமை மூல ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் / தீர்ப்புகடனாளி / பிரதிவாதிக்கு மனுச்சொத்தில் எந்தவொரு உரிமையும் இல்லாத நிலையில் குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க எண்ணி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் / தீர்ப்புகடனாளி / பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதால் எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதியின் செலவுத்தொகையுடன் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6) இம்மனுவானது E.P.R.No.11/2017 மனுவில் மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள உரிமை விளம்புகை கோரும் மனுவான E.A.39/2018 மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்படும்வரை நிறைவேற்று மனுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்து உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதி மற்றும் எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. கற்றறிந்த இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரை கேட்கப்பட்டது.

7) மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அசல் வழக்கில் 2011ம் ஆண்டில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் ஆறு வருடங்கள் வரை எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதி

நிறைவேற்று மனுவினை தாக்கல் செய்யாமல் இருந்து விட்டு 2017 ம் ஆண்டில் தாவா சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்கக்கோரி இந்த நிறைவேற்று மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி நிறைவேற்று மனுவில் மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதிக்கு அறிவிப்பு சார்பு செய்யப்படாத நிலையில் மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தால் தோன்றாதரப்பினராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு சுவாதீன ஒப்படைப்பு உத்தரவு பிறப்பித்ததின் அடிப்படையில் நீதிமன்ற அமீனா தாவா சொத்தின் சுவாதீனத்தை எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதியின் வசம் ஒப்படைக்க வந்த போது தான் மேற்படி அசல் வழக்கில் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ள விபரமும், நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்யப்பட்ட விபரமும் மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதிக்கு தெரிய வந்ததின் காரணமாக தாவா சொத்தில் மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதிக்கு உள்ள உரிமைய விளம்புகை செய்யக்கோரி இந்த மனுவுடன் இணைத்து E.A.39/2018 என்ற எண்ணில் ஒரு உரிமை கோரும் மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்படும் வரையில் அசல் நிறைவேற்று மனுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், அவ்வாறு நிறுத்தி வைக்கப்படாத பட்சத்தில் அது மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதிக்கு மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் மனுவினை அனுமதிக்க வேண்டுமென்று வாதிட்டுள்ளார்.

8) எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அசல் வழக்கிலும், நிறைவேற்று மனுவிலும் முறையாக அறிவிப்பு சார்பு செய்யப்பட்ட பின்னரும் மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதி வேண்டுமென்றே நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்து வந்ததாகவும், இதற்கு முன்னதாகவும் எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதி நிறைவேற்றுதல் மனுவினை தாக்கல் செய்திருந்த நிலையில் எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை

பெற்றவர் / வாதியின் உடல்நலக்குறைவின் காரணமாக மேற்படி மனுவில் ஆஜராகாத இயலாத காரணத்தால் மேற்படி நிறைவேற்றுதல் மனுவானது தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர், இந்த நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அசல் வழக்கு மற்றும் நிறைவேற்றுதல் மனு ஆகியவற்றில் முறையாக மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு சார்பு செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதி மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பாணை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ள E.A.39/2018 மனுவானது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்பதால் மேற்படி மனு தீர்மானிக்கப்படும் வரை நிறைவேற்று மனுவின் நடவடிக்கைளை நிறுத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று வாதிட்டுள்ளார்.

**9)** இரு தரப்பு வாதுரையிலிருந்தும், வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்தும், அசல் நிறைவேற்று மனுவானது எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதியால், மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதிக்கு எதிராக தாவா பி செட்யூல் சொத்தின் சுவாதீனம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

10) மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதி தரப்பில் இம்மனுவுடன் இணைத்து தாக்கல் செய்துள்ள E.A.39/2018 மனுவினை தாவா சொத்தில் தனக்குள்ள உரிமைய தீர்மானிக்கக்கோரி தாக்கல் செய்துள்ளதாக தெரிய வருகிறது.

11) மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதி தாவா சொத்தில் தனக்கு உரிமையுள்ளது என்பதால் நிறைவேற்று மனுவினை தள்ளுபடி செய்யவேண்டுமென்று கூறி E.A.39/2018 என்ற எண்ணில் உரிமை கோரும் மனுவினை தாக்கல் செய்துள்ள நிலையில் மேற்படி மனுவானது தீர்மானிக்கப்படும் வரையில் அசல் நிறைவேற்று மனுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கக்கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

12) ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளவாறு E.A.39/2018 மனுவானது தாவா சொத்தில் மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதிக்கு உள்ள உரிமையை விளம்புகை செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அசல் நிறைவேற்று மனுவில் தாவா பி செட்யூல் சொத்தின் சுவாதீனத்தை மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதி, எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதியின் வசம் ஒப்படைக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் E.A.39/2018 மனுவில் தீர்வு காணப்படும் வரையில் நிறைவேற்று மனுவில் கோரப்பட்டுள்ள பரிகாரத்தை வழங்கும் பட்சத்தில் அது வழக்கில் தேவையற்ற பிரச்சனையை ஏற்படுத்தும் என்பதால் E.A.39/2018 மனுவானது தீர்மானிக்கப்படும் வரையில் அசல் நிறைவேற்றுதல் மனுவின் நடவடிக்கைகளை நீதியின் நலன் கருதி நிறுத்தி வைக்க வேண்டியது அவசியமாக உள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

13) முடிவாக இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு ஜீன் மாதம் 30ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G ANANTHI Digitally signed by G ANANTHI Date: 2022.06.30 17:27:09 -0400

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் / தீர்ப்பு கடனாளி / பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:</u>**

– இல்லை –

**<u>எதிர்மனுதாரர் / தீர்ப்பாணை பெற்றவர் / வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:</u>**

– இல்லை –

G ANANTHI Digitally signed by G ANANTHI Date: 2022.06.30 17:27:23 -0400

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
பொள்ளாச்சி.

Page numbers

Page numbers

---------------------------------------

**அசல் / வரைவு ஆணையுரை**

O.S.244/2011 இல் E.P.11/2017 இல் E.A.38/2018

நாள் : 30.06.2022

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

பொள்ளாச்சி

---------------------------------------